வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி: 26.07.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

2 நாள் அரசு முறைப் பயணமாக தமிழகத்திற்கு வருகை தரும் பிரதமர் திரு நரேந்திர மோடி, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, வேறு பல திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

இன்று நடைபெறுகின்ற மாலத்தீவின் 60ஆவது சுதந்திர தின விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, கவுரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

புதுச்சேரியில் நடைபெற்ற கார்கில் வெற்றி தின விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, கார்கில் நினைவு தூணிற்கு மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது எண்ணங்களை நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது.

---

*மோடி தமிழகம் 1* (17)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை, 2 நாள் பயணமாக தமிழகம் வருகிறார். மாலை 7.45 மணி அளவில், தூத்துக்குடியில் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி விமான நிலைய புதிய முனையம், 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வ. உ. சி. துறைமுகத்தில் 3 வது வடக்கு சரக்கு முனையம், 200 கோடி ரூபாய் செலவில் 6 வழி சாலையாக

மேம்படுத்தப்பட்ட தூத்துக்குடி துறைமுக சாலை உள்ளிட்டவையை மக்கள் பயன்பாட்டிற்காக பிரதமர் திறந்து வைக்க உள்ளார். மேலும், விக்ரவாண்டி-தஞ்சாவூர் சாலை வழிதடத்தின் கீழ், 2 ஆயிரத்து 350 கோடி ரூபாய் செலவில் சேத்தியார்தோப்பு-சோழபுரம் நான்கு வழி சாலை விரிவாக்க பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் அவர், 650 கோடி ரூபாய் மதிப்பில் மதுரை-போடிநாயக்கனூர் ரயில்பாதை மின்மயமாக்கும் பணிகள், நாகர்கோவில்-கன்னியாக்குமரி இரட்டை ரயில் பாதை பணிகளையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார்.

அதனை தொடர்ந்து, திருச்சி விமான நிலையம் வரும் அவர், ஹெலிகாப்டர் மூலம் அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறார். நாளை நடைபெறும் ஆடி திருவாதிரை விழாவில், முதலாம் ராஜேந்திர சோழனின் கங்கை வெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். யுனெஸ்கோவால்

மோடி தமிழகம் 2 (8)

உலக பாரம்பரிய தலமாக அறிவிக்கப்பட்டுள்ள கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோவிலில் நடைபெறும் இவ்விழாவில் நினைவு நாணயத்தையும் பிரதமர் வெளியிட உள்ளார். இந்நிகழ்வை ஒட்டி, முதலாம் ராஜேந்திர சோழனின் கங்கை பயணம் மற்றும் கடாரம் பயணம் குறித்தும், சைவம் மற்றும் சோழ சகாப்தம் தொடர்பான புகைப்பட கண்காட்சிக்கும், இந்திய தொல்லியல் துறை ஏற்பாடு செய்துள்ளது.

பிரதமரின் வருகையை ஒட்டி, அரியலூர் மற்றும் திருச்சி மாவட்டத்தில் உச்ச கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழ் மொழியின் சிறப்பையும், கலாச்சார பெருமையையும், உலகெங்கிலும் ஓங்கி ஒலித்து வருவதாக, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், முதலாம் ராஜேந்திர சோழ மன்னனின் பிறந்தநாள் விழா, கங்கை கொண்ட சோழபுரம் கோவிலின் ஆயிரமாவது ஆண்டு விழா, மற்றும், ஆடி திருவாதிரைத் திருவிழாவில் பிரதமர் பங்கேற்பது, தமிழர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

---------------------------

*மோடி-மாலத் தீவு 1 (16)*

மாலத்தீவின் தலைநகர் மாலேவில், இன்று நடைபெறுகின்ற அந்நாட்டின் 60ஆவது சுதந்திர தின விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, கவுரவ விருந்தினராக கலந்து கொண்டார். மாலத்தீவு அதிபர் திரு. முகமது மொய்சூ-வின் சிறப்பு அழைப்பின் பேரில் பிரதமர் மாலத்தீவிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று, அதிபர் மொய்சூ மற்றும், அந்நாட்டின் முதல் பெண்மணி திருமதி சஜிதா முகமது ஆகியோரால் வழங்கப்பட்ட சிறப்பு விருந்தில் பங்கேற்று பேசிய பிரதமர் திரு. மோடி, அழைப்பிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். மேலும், மாலத்தீவு மக்களுக்கு, சுதந்திர தின வாழ்த்துக்களையும் அவர் தெரிவீத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாலத்தீவு அதிபர், இந்தியாவின் 2ஆவது நீண்டகால பிரதமராக பதவி வகிக்கும் திரு. மோடிக்கு வாழ்த்து தெரிவித்தார். பிரதமரின் தலைமையை பாராட்டிய அவர், இந்தியா, நீண்டகாலமாக மாலத்தீவின் நம்பகமான மற்றும் நெருங்கிய கூட்டாளியாக இருந்து வருவதாகவும், பாதுகாப்பு, மற்றும், வர்த்தகம் முதல், கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில், இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்றும், தெரிவித்துள்ளார்.

*மோடி-மாலத் தீவு 2 (5)*

இதனிடையே. மாலத்தீவு துணை அதிபர் திரு. ஹூசைன் முகமது-வுடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை பிரதமர் இன்று மேற்கொண்டார். மேலும், வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், வெளியுறவுத் துறைச் செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

---------------------------

*கார்கில் வெற்றி தினம் 1 (17)*

கார்கில் வெற்றி தினம் இன்று கொண்டாடப் படுகிறது. இதனையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், நமது பாதுகாப்புப் படை வீரர்களின் துணிச்சலை இந்த வெற்றி எடுத்துரைப்பதாக, கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களின் தியாகம், என்றென்றும் நினைவுக் கூறப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நாளையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு

நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. புதுடெல்லியில் உள்ள தேசிய போர் நினைவுச் சின்னத்தில், கார்கில் போரில் உயிர் நீத்த வீரர்களின் நினைவாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சவுகான், ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, விமானப் படை தளபதி ஏர்சீஃப் மார்ஷல் ஏ.பி சிங், கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி உள்ளிட்டோரும் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

லடாக் ட்ராஸ்-சில் அமைந்துள்ள கார்கில் போர் நினைவுச் சின்னத்தில் அஞ்சலி செலுத்திய ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, 1999ஆம் ஆண்டு, உயரமான மலைப் பகுதிகளில்



கடினமான சூழலில், பாகிஸ்தான் படைகளுக்கு எதிராக, வீர தீரத்துடன் போரிட்டு, உயிர்த் தியாகம் செய்து, தேசத்தில் அமைதியை நிலை நாட்டிய வீரர்களின் துணிச்சல் என்றென்றும் போற்றப்படும் என்று கூறினார்.

மேலும், ஆப்ரேஷன் சிந்தூர் மூலம் தீவிரவாதத்திற்கு எதிரான உறுதியான செய்தியை இந்தியா, பாகிஸ்தானுக்கு தெரிவித்துள்ளதாக அவர் கூறினார். தீவிரவாதத்திற்கு ஆதரவு அளித்தால், கடும் விளைவை எதிர்கொள்ள நேரிடும் என்பதை, ஆபரேஷன் சிந்தூர் மூலம் உணர்த்தப் பட்டுள்ளதாக ஜெனரல் உபேந்திர துவிவேதி தெரிவித்துள்ளார். நாட்டின் வான் பாதுகாப்புக் கட்டமைப்பு குறித்து பெருமிதம் தெரிவித்த அவர், ட்ரோன்

மற்றும் ஏவுகணை அச்சுறுத்தலுக்கு எதிராக, நம் வான் படை, வலுவான அரணாக திகழ்வதாக குறிப்பிட்டார்.

----------------------------

*கார்கில்-புதுச்சேரி* (10)

புதுச்சேரி அரசு சார்பில் கடற்கரை சாலையில் நடைபெற்ற கார்கில் வெற்றி தின விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கலந்து கொண்டு, கார்கில் நினைவு தூணிற்கு மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, சபாநாயகர் திரு. செல்வம், துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம், திரு. லட்சுமி நாராயணன், திரு. திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயலாளர் திரு. சரத் சௌகான், காவல் துறை அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள், மற்றும், முன்னாள் ராணுவத்தினர் கலந்து கொண்டு, கார்கில் நினைவுச் சின்னத்திற்கு, மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சி குறித்த கூடுதல் தகவல்……

**(வாய்ஸ்)**

----------------------------

*மன் கீ பாத் (8)*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 124 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி, நாளை 27 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியை, ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிம்,

ஏஐஆர் செய்தி வலைதளத்திலும், ஏஐஆர் செய்தி வலைதளத்திலும், Newsonair மொபைல் செயலியிலும் ஒலிபரப்ப கேட்கலாம். ஆகாஷ்வாணியில் பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும்.

---------------------------

*புதுச்சேரி-ஜிப்மர்* (17)

பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில், நடைபெறும் பட்டமளிப்பு விழாவில், பட்டம் பெற வரும் மாணவர்களுக்கான ஆடை குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை, மத்திய அரசு அறிவித்துள்ளது. அதில், பட்டமளிப்பு விழாக்களில், இந்திய பாரம்பரிய உடைகளை மாணவர்கள் அணியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை பின்பற்றி, ஜிப்மர் நிர்வாகம், பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான ஆடைக் கட்டுப்பாடு குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதுகுறித்து, ஜிப்மரின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் திரு. சுரேஷ்குமார் கூறுகையில், ஆண்கள், இந்தியப் பாரம்பரிய உடையான, வெள்ளை நிற முழுக் கை சட்டை பைஜாமா அல்லது வெள்ளை நிற வேட்டி அணிய வேண்டும் என்றும், அதனுடன் கருப்பு அல்லது மெரூன் நிறத்திலான ஷூ அணிந்திருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். மேலும், பெண்கள், தங்க நிற பார்டருடன் கூடிய, வெள்ளை நிற புடவை, அல்லது, தங்க நிற பார்டருடன் கூடிய வெள்ளை நிற முழு கை சுடிதார் அணியலாம் என்றும், சத்தம் எழுப்பாத காலணியை அணிந்து வர வேண்டும் என்றும் உத்தரவிடப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். பாரம்பரிய உடை

அணியாவிட்டால், பட்டமளிப்பு விழாவிற்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது குறித்து திரு. சுரேஷ் குமார் மேலும் கூறுகையில்.....

**(வாய்ஸ்)**

**----------------------------**

*கஜேந்திர சிங் ஷெகாவத்* (10)

சோழர்களின் வரலாற்றையும், அவர்கள் கட்டமைத்த கோவில்களின் கலைப் பாரம்பரியத்தையும், உலகிற்கு பறைசாற்றும் முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக, மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார். தஞ்சை அரண்மனைக் கட்டடங்களை பார்வையிட்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, கலாச்சார மையங்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக, எடுத்துரைத்தார். தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலங்களில், உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

**----------------------------**

*பியூஷ் கோயல்* (11)

இந்தியா- பிரிட்டன் இடையே கையெழுத்தான, தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இரு நாடுகளின் வர்த்தகத்தை ஆக்கபூர்வமான முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் என்று, மத்திய வர்த்தம் மற்றும்

தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று இதனை தெரிவித்த அவர், பிரிட்டன் நாடாளுமன்ற ஒப்புதலுக்காக காத்திருக்கும் இந்த ஒப்பந்தத்தால், இந்திய விவசாயிகள், வர்த்தகர்கள் பயன் அடைவார்கள் என்றார். சிறு,குறு தொழில் முனைவோர், இளையோர், மீனவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும், புதிய வாய்ப்புகளுக்கு இந்த ஒப்பந்தம் வகை செய்வதாக அவர் கூறினார். இந்த ஒப்பந்தத்தின் மூலம், இந்தியா ஏற்றுமதி செய்யும் 99 சதவிகித பொருட்களுக்கு, வரி சலுகை கிடைக்கப் பெறும் என்றும் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

---------------------------

செஸ் (7)

ஜார்ஜியாவில், ஃபிடே மகளிர் செஸ் உலக சாம்பியன் போட்டியின் இறுதி ஆட்டத்தில், கொனேரு ஹம்பியும், திவ்யா தேஷ்முக்-கும் இன்று மோதுகின்றனர். இறுதிப் போட்டியில் நுழைந்துள்ள இவ்விருவரும், அடுத்த ஆண்டு ஃபிடே மகளிர் கேண்டிடேட்ஸ் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்றுள்ளனர். மேலும், இதில் வெற்றி பெறுபவர், உலக சாம்பியன் பட்டப் போட்டியில், சீனாவைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் ஜூ வெஞ்சன்னுடன் மோதும் வாய்ப்பை பெறுவர்.

---------------------------

*பேட்மிண்டன் (3)*

சீன ஓபன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் ரான்கி ரெட்டி-ஷிராக் ஷெட்டி இணை, மலேசியாவின் ஆரோன் சியா-சோ உய் க் இணையை இன்று எதிர்கொள்கிறது.

----------------------------

*டேபிள் டென்னிஸ்* (7)

அர்ஜென்டினாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் களப்பு இரட்டையர் பிரிவில், இந்தியாவின் ஹர்மீத் தேசாய்-யஷஷ்வினி கோர்பத்தே இணை, இறுதி ஆட்டத்திற்கு முன்னேறி உள்ளது. மேலும், ஆடவர் இரட்டையர் பிரிவில், பாயாஸ் ஜெயின்-அங்கூர் பட்டா சார்ஜி இணையும், இறுதி ஆட்டத்திற்கு முன்னேறி உள்ளது. மகளிர் ஒற்றையர் பிரிவில், அயிகா முகர்ஜியும், ஆடவர் ஒற்றையர் பிரிவில், மானவ் தாக்கரும், காலிறுதிக்கு முன்னேறி உள்ளனர்.

----------------------------

*வானிலை (6)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் கன மற்றும் மிக கனமழையும், திருநெல்வேலி, தேனி, தென்காசி மாவட்டங்களில், கனமழையும் இன்று பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.  புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலையே நிலவியதாகவும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

2 நாள் அரசு முறைப் பயணமாக தமிழகத்திற்கு வருகை தரும் பிரதமர் திரு நரேந்திர மோடி, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, வேறு பல திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

இன்று நடைபெறுகின்ற மாலத்தீவின் 60ஆவது சுதந்திர தின விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, கவுரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

புதுச்சேரியில் நடைபெற்ற கார்கில் வெற்றி தின விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, கார்கில் நினைவு தூணிற்கு மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது எண்ணங்களை நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது.